1971 ஜூன் 24]

DR. H. V. HANDE: May I know whether the report has been sent to Central Government? Because there is a controversy and a news item had appeared in the press that the Centre had not received the report? May I know from the Hon. Chief Minister whether he has sent the report to the Home Minister and Prime Minister?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அவர்களுக்கு அனுப்பாமல் எப்படி இருந்திருக்க முடியும்?

Attack on police personnel at Kivalur

* 37 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether a Police Inspector of Kivalur and a party of policemen were attacked by a group of persons on 14-10-1969; and

(b) if so, whether any investigation has been ordered and the details of the investigation?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி:

(அ) ஆம்.

(இ) இது குறித்துப் புலனாய்வு மேற்கொள்ள ஆணையிடப் பட்டது; நாகப்பட்டினம், சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் முன்பு 22 குற்றவாளிகள் மீது குற்றம் சாட்டப்பட்டது. இக்குற்றவாளிகள் மீது சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் குற்றங்களைச் சாட்டி, நாகப்பட்டினம் குற்றத் துறைத் துணை நீதிபதியிடம் இவ்வழக்கை மாற்றினார். குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் குற்றவாளிகளென தீர்மானிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் 3 மாத கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

Prosperity Brigade

* 38 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether there is any proposal to form Prosperity Brigade in the Districts also; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:

(அ) சீரணி இந்த மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங் களிலும் ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.

(இ) கேள்வி எழவில்லை.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் சீரணி மூலம் கடந்த ஆண்டு எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள வேலைகளைச் செய்திருக்கின்றார்கள்?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.